நெல் போன்ற தானியங்களை வாங்கிக்கொண்டு வேலை செய்கிறார்கள். அதோடு சம்பளம் வாங்குகின்றவர்களும் இருக்கிறார்கள். சிலபேர் அங்கே கிடைக்கின்ற நெய் வேத்தியத்தை—சோறு முதலியவற்றைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். அங்கே இருப்பவர்கள் மூன்று ரூபாயிலிருந்து மூந்நூறு ரூபாய் வரை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த உள்துறை சிப்பந்திகளை ப்ரோவின்ஷியலைஸ் பண்ணுவது என்பது கஷ்டமான காரியம். அவர்கள் பாரம்பரியத்தில் வேலை பார்க்கிறவர்கள். ஆகவே, கோயில்களை ஏ, பி, சி, டி என்று நான்கு கிரேடுகளாகப் பிரித்து ஒவ்வொரு கிரேடு கோயிலுக்கும் சிப்பந்திகளை மாற்றும் நிலையை ஏற்படுத்தலாம். இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அவர்களை அரசாங்க சிப்பந்திகளாக ஆக்க முடியாது. ஒரு கோயிலில் இருக்கும் மானேஜர், கிளார்க் ஆகியவர்கள் அங்கு இருக்கும் நிர்வாக அதிகாரிகளுக்குக் கூடக் கட்டுப்பட்டு நடக்கவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறுகிறார்கள். அங்கிருக்கும் டிரஸ்டியை பிடித்துக்கொண்டு நிர்வாக அதிகாரியை மாற்றிவிடலாம் என்ற எண்ணத்தில் எந்தவிதமான தவறுக்கும் தயாராக இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் இருப்பதால் கோயில்களை கிரேடு வாரியாகப் பிரித்து சிப்பந்திகளை அவ்வப்போது மாற்றுவது பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான்: கொஞ்ச நாட்களுக்கு முன்பு புதுக்கோட்டை தேவஸ்தான ஊழியர்கள் இந்தக் கோரிக்கைகளுக்காக மனுக் கொடுத்தார்களே, அது அரசாங்கத்திற்கு வந்ததா? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: அரசாங்கத்திற்கு அப்படிப்பட்ட கோரிக்கை வந்திருக்கிறது. புதுக்கோட்டை நிலைமையே தனி. அங்கு கோயில்கள் இருக்கின்றனவே தவிர, பணம் கிடையாது. குருக்கள் கூட வசூல் செய்துதான் பூஜை செய்ய வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு நான்கு லட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். அங்கு ஆயிரத்தி சொச்சம் சிப்பந்திகள் இருப்பதால் இந்த ரூபாயைப் பங்கிட்டுக் கொடுக்கும்போது குறைவாகத்தான் வருகிறது. அவர்கள் அங்கிருக்கும் நிலங்களைத் தங்களுக்கு ஜாரி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

கோயில் நிதியைக் கொண்டு தொடங்கப்பட்ட கல்லூரிகள்.

* வினா 652 திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அறநிலைய பாதுகாப்புக்கு உட்பட்ட ஆலய வருமானத்திலிருந்து கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எத்தனை கல்லூரிகள்?

1970 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) இந்து சமயநிலை நிதியிலிருந்து ஐந்து கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

திரு. ஆலடி அருணா: இந்த கோயில்களில் எல்லாம் குறிப்பிட்ட வருமானத்திற்கு மேல் இவ்வளவு சதவிகிதம் பொதுப் பணிக்காகச் செலவு செய்ய வேண்டுமென்று உத்தரவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.வி. சுப்பையா: இத்தனை பர்சன்ட் அப்படிச் செலவிட வேண்டுமென்று சொல்லுவதற்குச் சட்டத்தில் இடம் கிடையாது. பொதுப்பணிக்கும் செய்யலாம் என்று சட்டத்தில் இடம் இருக்கிறது. பொதுப்பணிகளுடைய தன்மையைக் கருதியும் அத்தியாவசியத்தைக் கருதியும் இந்தப் பணிகள் நடந்து வருகின்றன.

திரு. ஈ. எம். நடராசன் : கோவை மாவட்டம் பன்னாரி மாரி அம்மன் கோயில் வருமானத்தில் இருந்து கல்லூரி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசாங்கத்திற்கு வந்ததா ? அங்கு கல்லூரி விரைவில் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : பன்னாரி அம்மன் கோயில் நிதியிலிருந்து கல்லூரி கட்டப் பணம் கொடுக்க வேண்டுமென்று நான் கோவை சென்றிருந்தபோது கேட்டுக் கொண்டார்கள். அந்த கோரிக்கை இன்னும் அரசாங்கத்திற்கு வரவில்லை. எங்களைப் பொறுத்தவரை கோயில் நிதியிலிருந்து பணத்தைக் கொடுப்பதற்குத்தான் அதிகாரம் இருக்கிறதே தவிர கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்றால் கல்வியமைச்சருக்குக் கோரிக்கை கொடுக்க வேண்டும். அதை பன்னாரி அம்மன் கோயில் இருக்கும் பகுதியிலேயே ஏற்படுத்துவதா அல்லது பவானியில் அதிக நிலங்கள் இருப்பதால், கட்டடங்கள் இருப்பதால் அங்கு ஏற்படுத்துவதா என்பதும் பரிசீலனையில் இருக்கிறது. கல்வியமைச்சரை முதலில் அணுகிய பிறகு இந்தக் கோயிலுக்கு வந்தால் நல்லது.

சமயநல்லூர் அனல் மின் நிலையம்.

* **வினா 653 திரு. கே. போஜன்:** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சமயநல்லூரிலுள்ள அனல் மின்சார நிலையம் கடந்த ஓராண்டு காலமாக செயல்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) 15—7—1968-லிருந்து சமயநல்லூர் அனல் மின்சார நிலையம் இடைவெளிவிட்டுச்